வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| தரம் :- 13 (2018) | இலங்கை வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி - I

| | | | |
|---|---|---|---|
| 1) 5 | 11) 1 | 21) 5 | 31) 2 |
| 2) 4 | 12) 3 | 22) 1 | 32) 5 |
| 3) 2 | 13) 5 | 23) 3 | 33) 4 |
| 4) 5 | 14) 2 | 24) 5 | 34) 2 |
| 5) 3 | 15) 2 | 25) 2 | 35) 1 |
| 6) 3 | 16) 3 | 26) 4 | 36) 5 |
| 7) 1 | 17) 1 | 27) 2 | 37) 2 |
| 8) 2 | 18) 3 | 28) 3 | 38) 5 |
| 9) 1 | 19) 2 | 29) 3 | 39) 2 |
| 10) 5 | 20) 4 | 30) 2 | 40) 2 |

### பகுதி - II

agaram.lk

*01.* படம் குறித்தல்

*02.*

❖ இயற்கைத் துறை முகங்கள்.
- பிரதான துறை முகங்கள் : மகாதீர்த்தம், கோகண்ண, ஜம்புகோளப் பட்டினம், கொடவாய
- இவற்றின் அரசியல் ரீதியான முக்கியத்துவம்.
- சமய ரீதியான முக்கியத்துவம்
- படையெடுப்புகள்
- பொருளாதார முக்கியத்துவம்
- பண்பாட்டு முக்கியத்துவம்

❖ மத்திய மலைகள்
- தனி அலகாக கண்டி காணப்பட்டமை.
- பாதுகாப்பினை இடமாக இது இருந்தமை.
- அரசர்கள் மறைவிடமாக இதனை பயன்படுத்தியமை.

❖ நதிகள்
- மத்திய மலைப்பகுதியில் இருந்து நாட்டின் பல பாகங்களுக்கு நதிகள் பாய்ந்து செல்லல்.
- குடியேற்றங்கள் நதிக்கரையில் தோன்றுதல்.
- தலைநகர்கள் நதிக்கரையில் தோன்றுதல்.
- விவசாய பொருளாதாரம் உருவாதல்.

- ❖ நதிகள்
  - மத்திய மலைப்பகுதியில் இருந்து நாட்டின் பல பாகங்களுக்கு நதிகள் பாய்ந்து செல்லல்.
  - குடியேற்றங்கள் நதிக்கரையில் தோன்றுதல்.
  - தலைநகர்கள் நதிக்கரையில் தோன்றுதல்.
  - விவசாய பொருளாதாரம் உருவாதல்.
- ❖ சம வெளிகள்
  - ஆரம்ப குடியேற்றங்கள் சமவெளிகளில் தோன்றுதல்.
  - வடக்கு, தென்கிழக்கு சமவெளிகளை மையமாக கொண்டு இராசதானிகள் தோன்றுதல்.
  - நீர்பாசனத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதாரம் உருவாக சமவெளிகள் உதவுதல்.

*03.*

- மூடசிவவுக்குப்பின் தேவநம்பியதீசன் அரசனாதல் அதே காலகட்டத்தில் இந்தியாவில் பேரசன் அசோகன் ஆட்சிபுரிதல்.
- தீசன் - அசோகன் நட்பு.
- பரிசுப்பொருள்கள் பரிமாறியமை.
- முடிசூட்டு விழாவிற்கான பொருட்களை பெறல்.
- மௌரிய முறைப்படி முடி சூட்டிக் கொள்ளல்.
- தேவநம்பிய என்னும் பட்டத்தை பயன்படுத்தல்.

1) பௌத்த சாசனம் நிறுவப்பட்டமை
- மகிந்ததேரர் வருகை.
- தேவநம்பியதீசன் உள்ளீட்டோர் பௌத்தமாதல்.
- பண்டுக உபாசகனாக துறவியாக்கல் மகாமேகவனத்தை தானமாக வழங்குதல்.
- அரிட்டன் உள்ளிட்ட குழுவினை துறவியாக்கப்படல்.
- சங்கமித்தை வருகை.
- வெள்ளசு மரம் நாட்டப்பட்டமை.
- தூபராமை அமைவு

2) பண்பாட்டு வளர்ச்சி
- ஒழுங்கமைக்கப்பட்ட சமயமாக பௌத்தம் காணப்பட்டது.
- சமயம் கல்வி என்பவற்றின் மத்திய நிலையமாக ஆராமைகள் காணப்பட்டது.
- போதி, தூபி வழிபாடுகள்.
- 18 குலங்களை சேர்ந்தவர்களது வருகையால் பல்வேறு கலைகள் வளர்ச்சியடைந்தது.
- எழுத்து / மொழி என்பன வளர்ந்தது.

*04.*

- இரசரட்டைராச்சிய வீழ்ச்சிக்கு – மக்கள் தொகை குறைந்தமை கலைநிலை மாற்றம், மண்வளம் இழந்தமை, கொள்ளை நோய்கள், குளங்கள் பாழடைந்தமை போன்றன காரணம்.
- வெளிநாட்டவரின் ஆக்கிரமிப்புக்கள் - 993 சோழர் ஆக்கிரமிப்பு 1215 இல் கலிங்க மாகன் படையெடுப்பு.
- இந்து சமுத்திர வர்த்தக நடவடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றம்.
- பலவீனமாக ஆட்சியாளர்கள்.

*05.*

- இக்கலை பகுதியில் வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்ட அரசர்கள் - முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு, நிஸங்க மல்லன்.
- விஜயபாகு சோழநாட்டினை ஆக்கிரமிக்க முயலுதல்.
- 1ம் பராக்கிரமபாகு பர்மா, பாண்டிய நாடுகள் ஆக்கிரமித்தல்.
- நிஸங்கமல்லன் சோழ மற்றும் பாண்டிய அரசுகளை ஆக்கிரமித்தல்.

agaram.lk

❖ **1ம் விஜயபாகு**

- அயோத்தி – ஜயதிபால அரசனின் மகன் லீலாவதியை திருமணம் செய்தல்.
- திரிலோக சுந்தரி எனப்படும் கலிங்க இளவரசியை திருமணம் செய்தல்.
- தனது சகோதரி மித்தாவை பாண்டிய இளவரசனுக்கு திருமணம் செய்தல்.

❖ **1ம் பராக்கிரமபாகு**

- கலிங்க சம்சத்துடன் விவாக உறவுகளை வைத்திருத்தல்.

❖ **நிஸங்கமல்லன்**

- கலிங்க சுபத்திரா மற்றும் கல்யானவதி ஆகியவர்களைத் திருமணம் செய்தமை.
- வேங்கி, கர்நாடகம், குர்ஜர அரசு வம்சங்களுடன் விவாக உறவுகளை மேற்கொண்டமை.

06. சமயம், கல்வி, சமூகம், கலை மற்றும் கட்டிட நிர்மானம் உணவு, ஆடையணிகள் போன்ற துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

**சமயம்**

- போர்த்துக்கேயரும், ஒல்லாந்தல்களும் தமது சமயங்களை பரப்புவதில் அதிக ஆர்வத்துடன் செயற்பட்டமை.
- சமயம் மாறியோருக்கு சலுகைகள் கிடைத்தல்.
- சுதேச சமயங்களை கடுமையாக கட்டுப்படுத்தினார்.
- 1620 இற்கு பின் பௌத்த, இந்து வழிபாடுகள் தடை செய்யப்பட்டனர்.

**கல்வி**

- பாடசாலை கல்வி அறிமுகம் இதனை சமயம் பரப்பும் ஒரு கருவியாக பயன்படுத்தல்.
- திட்டமிட்ட கல்வி அமைப்பு
  போர்த்துக்கேயர் - பரிஷ் பாடசாலைகள்
  ஒல்லாந்தர் - ஸ்கொலஸ்கொமிஷன்.
- அச்சியந்திரம் ஒல்லாந்தரால் அறிமுகம் செய்யப்பட்டது.
- அகராதி, லத்தீன் இலக்கண நூல்கள் வெளியிடப்பட்டமை.

agaram.lk

**சமூகம்**

- ஒல்லாந்தர் உரோமன் டச்சு சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.
- ஒரு தாரமுறை அமுலானது.
- பறங்கியர் என்னும் இனம் உருவானமை.
- அதே மொழியில் இவர்களில் சொற்கள் கலந்தமை.
- உணவு ஆடை அணிகலன் மாற்றமுற்றமை.
- விவாகத்தின் பின் பெண்கள் கணவன் பெயரைதாங்கும் முறை ஏற்பட்டது.
- லைலா, கபிறிஞ்சா போன்ற கலை வளர்ச்சி.

07. i) ஜோன் டொய்லி

ii)

- ஆளுநர் - ரொபட் பிரவுன்றிக்
- பிரதானிகள் - எஹலபொல, மொல்லிகொட, பிலிமத்தலாவை மொனரவில, ரதவத்தே துல்லேவ, மில்லேவி, கலகம, கலகொட

iii)

- 1815 மார்ச் 02 ஆம் திகதி செங்கடகல மங்குல் மண்டபத்தில் கூடிய அதிகாரம் திசாவைகள் நிலமே மற்றும் ஆங்கில அரசனின் பிரதிநிதியான ஆளுநரின் முன்னிலையில் வாசிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டஆவணமே கண்டி ஒப்பந்தமாகும். இது 12 சரத்துக்களைக் கொண்டது.

- *1, 2, 3* ஆம் சரத்துக்கள் மலபார் அரசனான ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கொடூரமான அரசன் எனவும் அவன் மக்களின் உரிமைகளை மதிக்காதவன் எனவும் இதனால் அவன் பதவி நீக்கப்பட்டு அவனது உறவினர்களும் வெளியேற்றப்பட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.
- 4ஆம் சரத்து – கண்டி இராசதானி 3 ஆம் ஜோர்ஜ் மன்னனிடம் கையளிக்கப்பட்டதாகவும், இங்கிலாந்து அரசனின் பிரதிநிதியான ஆளுநர் நாயகமும் அவரது பிரதிநிதிகளாலும் நிர்வாகம் மேற்கொள்ளப்படும் எனவும் சுதேச அதிகாரிகளினதும் பிரதானிகளினதும் பதவிகள், உரிமைகள், சாசனங்கள் பாதுகாக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

vi)

- நாயக்கர் ஆட்சியை நீக்கிவிட்ட சுதேச நிர்வாகத்தை ஆங்கிலேயர்கள் ஏற்படுத்துவார்கள் என கண்டி மக்கள் நம்பினாலும் அது நடைபெறவில்லை.
- கண்டிய அரசாட்சி முறை நீக்கப்பட்டது. கண்டி உடன்படிக்கையின் படி இலங்கையின் இறுதிச்சுதந்திர இராச்சியம் வீழ்ச்சியடைந்தது. நவீன ஏகாதிபத்திய இராஜதந்திரத்திற்கு அடி பணிந்தது.
- பௌத்தம் மதம் பாதுகாக்கப்படும் என ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கண்டி அரசர்களால் வழங்கப்பட்ட மரியாதைகள், காணிக்கைகள், அந்நிய சமயத் தலைவர்களால் வழங்கப்படாது என்பதை பிக்குகள் உணர்ந்தனர்.

*08.* i)

- கோல்புறூக் கமெரன் ஆணைக்குழு அனுப்பி வைக்கப்பட்டதன் நோக்கம் இலங்கையின் வருமானத்தை விட செலவுகள் அதிகரித்தமைக்கான காரணங்களைக் கண்டிறிந்து வருமானத்தை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதாகும்.
- அதற்கிணங்க பிரித்தானியர் இதுவரை காலமும் பின்பற்றிய குடியேற்றவாத பொருளாதாரக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்த ஆலோசணைகளை முன்வைத்தார். ஆணையாளர்கள் முன்வைத்த பொருளாதார மறுசீரமைப்புத்திட்டம் முக்கியம் பெறுவதுடன், அவர்கள் முன்வைத்த ஏனைய ஆலோசனைகளும் கோல்புறுக்கின் ஆலோசனைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- தனியார் முயற்சியாளர்களைக் கொண்ட அரச தலையீடில்லாத பொருளாதாரத் திட்டத்தினையே ஆணையாளர்கள் முன்வைத்திருந்தனர். (கோல்புறூக் - கமிஷனர்)

agaram.lk

B)

- பிரித்தானி மிசனரி அமைப்புக்களும், சில ஆங்கில அதிகாரிகளும் தமது சமயத்தையும் கலாசாரத்தையும் பிரச்சாரம் செய்வதற்கு கல்வியைப் பயன்படுத்தியதற்கு எதிராக சுதேச மக்கள் மேற்கொண்ட எதிர்ச் செயற்பாடாக சமய கலாசார மறுமலர்ச்சி ஏற்பட்டது.
- தேசபிமானம், தேசிய உறுதிப்பாடு வளர்ச்சியடைந்தமை என்பவும் காரணமாக அமைந்தது.
- சமய, கலாசார மறுமலர்ச்சி பௌத்த, இந்து மற்றும் இஸ்லாமிய சமயங்களிடையும் ஏற்பட்டன.
- தமிழ் மொழி இலக்கியம், சமஸ்கிரத மொழிக்கல்வி போன்றவற்றை முன்னேற்ற நடவடிக்கை எடுத்தமை.
- பாடசாலைகளை ஏற்படுத்தி கல்வியை முன்னேற்ற நடவடிக்கை மேற்கொண்டமை. *1849-1850* ஆம் ஆண்டுகளில் வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டமை. கிராமங்களில் இந்து பாடசாலைகளை உருவாக்கியமை.